# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதளமுகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு.மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

முறையீட்டு மனு எண். 103/மா/2024,
நாள் 13.12.2024

திரு.எம். கோபிநாத், சென்னை. ................ முறையீட்டு மனுதாரர்.

மண்டல அலுவலர், ................ எதிர் மனுதாரர்.
மண்டலம் 6,
பெருநகரசென்னை மாநகராட்சி.

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்ணூர் நெடுஞ்சாலை, கதவு எண்.16/158 முதல் தளம் என்கிற முகவரியில் வசிக்கும் திரு எம். கோபிநாத் என்பவரின் 17.06.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.06.2024 அன்று பெறப்பட்டு, 103/மா/2024, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது

ஆணை

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்ணூர் நெடுஞ்சாலை, கதவு எண்.16/158 முதல் தளம் என்கிற முகவரியில் வசிக்கும் திரு எம். கோபிநாத் என்பவர் தன்னுடைய 17.06.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"சென்னை 12, ஓட்டேரி, சோமசுந்தரம் நகர், குக்ஸ் சாலை, சர்வே எண்.273/48 Part and 274/49 Part, Block No.47, Perambur Village, கதவு எண்.20/21, 25, 290/1 மற்றும் 292-இல் உள்ள 1331.12 ஸ்கோயர் மீட்டர் திறந்தவெளி நிலம் தானமாக தானபத்திரம் எண் 4995/2018 நாள் 21.08.2018 மூலமாக KLP Project Private Limited-ன் சார்பாக அதன் செயலாளர் CMDA-க்கு அளித்தார். 20.09.2018 முதல் கடந்த ஐந்து வருடங்களாக மேற்குறிப்பிட்ட திறந்தவெளி நிலம் பொது பயன்பாட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சியிடம் வசம் ஒப்படைக்காமல், KLP Project Pvt.Ltdன் உரிமையாளரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இது குறித்து 07.02.2024 நாளன்று பதிவு தபால் மூலம் அரசு கூடுதல் தலைமைச்செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோருக்கு மேற்கண்ட திறந்தவெளி இடத்தை கையகப்படுத்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர புகார் மனுக்கள் அளித்தேன். மாவட்ட வருவாய் அலுவலர், என்னுடைய புகார் மனுவினை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்6ன் மண்டல

அலுவலருக்கு உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பியுள்ளதாக பதில் அளித்தார். இதுவரை என் புகார் மனு மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**எனது கோரிக்கைகள்:**

(1) சென்னை 12, ஒட்டேரி, சோமசுந்தரம் நகர், குக்ஸ் சாலை, சர்வே எண்.273/48 Part and 274/49 Part Block No.47, Perambur Village, கதவு எண். 20/21, 25, 290/1 மற்றும் 292-இல் உள்ள 1331.12 ஸ்கோயர் மீட்டர் திறந்தவெளி நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சி கையகப்படுத்த வேண்டும்.

(2) அதனை விதிமுறைகளின்படி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் அதற்கு மாறாக எவ்வித கட்டிடமும், மேம்பாடும் செய்ய கூடாது.

(3) பெருநகர சென்னை மாநகராட்சியின் மேற்படி திறந்தவெளி நிலத்தை கட்டுபாட்டிற்குள் கொண்டுவராத அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

2. மேற்கண்ட கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 16.08.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6ன் மண்டல அலுவலர் தனது 04.11.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"It is hereby submitted that based on the complaint no.2024-350 RII of 5.1.2024, Greater Chennai Corporation has sent a reply letter to the petitioner, Thiru M.Gopinath mentioned as "Sir, the above mentioned location is an OSR land belongs to Greater Chennai Corporation Gifted by (M/s.Sanklecha Infra Projects Private Limited, represented herein by its Director Thiru Bhawarlal Jain, and M/s KLP Projects Private Limited, represented herein by its Director Thiru Manessh Parmar) KLP through online on 24.03.2024.

In this regard, it is further informed that, CMDA has handed over the OSR to Greater Chennai Corporation on 27.8.2021 and copy of handing over form is enclosed herewith for your reference. A boundary wall has been already constructed.

At present, the OSR land is in the possession of Greater Chennai Corporation, enclosed with compound wall. It is not utilized by KLP and the Photos of present condition are submitted with this reply.

All the parks in the Greater Chennai Corporation are taken up for the improvement. This park will be taken up for the improvement and estimate is being prepared.

In this regard,

(1) The land is under the physical possession of Greater Chennai Corporation only.

(2) The Department will take up and estimate will be submitted to obtain administrative sanction.

The above details submitted for kind reference and the petitioner request will be taken care of once the development works are done." என்று தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 08.11.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 08.10.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 08.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மத்திய சென்னை மாவட்டம், சென்னை மாநகராட்சி மண்டலம் 6, ஓட்டேரி, குக்ஸ் சாலை, கதவு எண்.21/20, 25/274, 290/1 & 292ல், KLP Construction Pvt.Ltd., என்ற நிறுவனத்தால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971–ன்படி 1331.12 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலம் திறந்தவெளி பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு, ஆவணம் எண்.4995/2018, தேதி 21.08.2018, புரசைவாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு தானமாக வழங்கப்பட்டது. மேற்கண்ட திறந்தவெளி நிலம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடம் இருந்து, 27.08.2021 அன்று, உதவிப் பொறியாளர், டிவிசன் 73, மண்டலம் 6 பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு மாறுதல் செய்யப்பட்டது. ஆனால் இதுவரை 1331.12 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மேற்கண்ட திறந்தவெளி நிலம், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக, சென்னை மாநகராட்சியை கைப்பற்றவிடாமல், மேற்கண்ட KLP Construction Private Limited, நிறுவனம் தன்னுடைய ஆக்கிரமிப்பிலேயே வைத்துள்ளது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கண்ட திறந்தவெளி நிலத்தை கைப்பற்றி, ஆக்கிரமிப்பை அகற்றி மேம்படுத்தி மக்களின் பயன்பாட்டிற்கு விட எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்றும், மேற்கண்ட திறந்தவெளி நிலத்தை கைப்பற்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்றும் கோரி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், நிலம் மற்றும் உடமைத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியோருக்கு 07.02.2024 அன்று பதிவு தபால் மூலம் புகார் அளித்திருந்தேன். மேலும் Onlineலும் புகார் அளித்திருந்தேன்.

21.02.2024 தேதியிட்ட பதிவு தபாலின் மூலம் எனது புகாருக்கு பதிலளித்த மாவட்ட வருவாய் அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்கள், மேற்கண்ட எனது புகாரில் சொல்லப்பட்ட திறந்தவெளி நிலத்திற்கு ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தவறான தகவல் அளித்தார். மேலும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன்படி பொது தகவல் அலுவலர், தனி வட்டாட்சியர், நிலம் மற்றும் உடமைத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்களிடம் மேற்கண்ட திறந்தவெளி நிலம் குறித்த தகவல் கோரிய எனது 07.02.2024 தேதியிட்ட மனுவிற்கு, மேற்கண்ட திறந்தவெளி நிலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது என்று தவறான தகவல் அளிக்கப்பட்டு, அதற்கான இரண்டு பட்டா நகல்களும் (சர்வே எண்.273/49 & சர்வே எண்.274/50 பிளாக் எண்.17, பெரம்பூர் கிராமம்) பதிலுடன் இணைத்து எனக்கு வழங்கப்பட்டது.

ஆனால், மேற்கண்ட புகாரில் கூறப்பட்டுள்ள திறந்தவெளி நிலத்தின் பரப்பளவு 1331.12 சதுர மீட்டர் தான். 1331.12 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தை மட்டும் தான் மேற்கண்ட KLP Construction நிறுவனம் தானமாக சென்னை மாநகராட்சிக்கு வழங்கியது. ஆனால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட பட்டா நகலில் 660 சதுர மீட்டர் பரப்பளவு கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது 20.9 ஏர்ஸ் (2009 சதுர மீட்டர்) பரப்பளவிற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பாக மேலும் ஆய்வுகளை நான் மேற்கொண்ட போது SBI வங்கி சர்வே எண்.273/35–ல் சென்னை மாநகராட்சிக்கு 1995–ஆம் வருடம், 20.9 ஏர்ஸ் (2009 ச.மீ) பரப்பளவு கொண்ட நிலத்தை தானமாக ஆவணம் எண்.1145/1995, புரசைவாக்கம் சார் பதிவு அலுவலகம் மூலம் வழங்கியுள்ளது தெரியவந்தது. மேலும் 2013–ஆம் ஆண்டு மேற்கண்ட SBI வங்கி நிறுவனம் சாலை விரிவாக்கத்திற்காக 1177 ச.மீ நிலத்தை ஆவணம் எண்.4123/2013, புரசைவாக்கம் சார் பதிவாளர் அலுவலகம் மூலம் தானமாக வழங்கிய ஆவணத்தில், 1995ஆம் ஆண்டு தானமாக வழங்கிய 2009 ச.மீ நிலத்திற்கான வரைப்படத்தை இணைத்துள்ளது. இந்த இரண்டு ஆவணங்களையும் எனது இந்த வாக்குமூலத்துடன் இணைத்துள்ளேன்.

SBI வங்கியால் சர்வே எண்.273/35–ல் 1995–ஆம் ஆண்டு வழங்கப்பட்ட, 20.9 ஏர்ஸ் (2009 ச.மீ) திறந்தவெளி நிலத்தின் பட்டாவை, KLP Construction நிறுவனம், தானமாக சர்வே எண்.273/48 மற்றும் சர்வே எண்.274/49–ல் தான ஆவணமாக எண்.4995/2018 மூலம் வழங்கிய நிலத்தின் பட்டா என்று மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொது தகவல் அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, ஆகியோர் தவறான தகவல் அளித்துள்ளது தெரிய வந்தது.

6. பொது மக்களின் நலனுக்காக, சட்டப்படி தானமாக அளிக்கப்பட்ட நிலத்தை முறையாக கையகப்படுத்தாமலும், பட்டா உள்ளிட்ட வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யாமலும், தனியார் ஆக்கிரமிப்பை அகற்றி பராமரிக்காமலும், அந்த பொதுமக்களுக்கான திறந்தவெளி நிலம் தனியார் ஆக்கிரமிப்பில் தொடர்ந்து இருப்பதற்கு வேண்டுமென்றே துணையாகவும், கடமையில் அலட்சியமாகவும் செயல்பட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கவும், மேற்கண்ட திறந்தவெளி நிலத்தை கைப்பற்றி, தனியார் ஆக்கிரமிப்பை அகற்றி மேம்படுத்தி, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழிவகுக்கவும், எனக்கு பொய்யான தகவலை அளித்த அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும் இம்முறைமன்ற நடுவம் உத்திரவிட பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ன் உதவி செயற்பொறியாளர் 08.11.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை–12, ஓட்டேரி, சோமசுந்தரம் நகர், குக்ஸ் சாலை, சர்வே எண்.273/48 part and 274/49 park Block No.47, பெரம்பூர் வில்லேஜ், கதவு எண்.20/21, 25, 274, 290/1 மற்றும் 292–இல் உள்ள 1331.12 ஸ்கோயர் மீட்டர் திறந்தவெளி நிலம் Thiru Bhawarlal Jain மற்றும் திருவாளர்கள் KLP Projects Pvt.Ltd., அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் 27.08.2021 அன்று ஒப்படைப்பு செய்தனர்.

(1) மேலும் மேற்குறிப்பிட்ட திறந்தவெளி இடம் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலும் அதனைச்சுற்றி சுவர் எழுப்பப்பட்டு பாதுகாப்பாக உள்ளது.

(2) மேற்கண்ட திறந்தவெளி இடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் பெயரில் பட்டா பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(3) மேற்கண்ட திறந்தவெளி இடத்தில் “இவ்விடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது'' என்ற அறிவிப்பு பலகை பொதுமக்களுக்கு தெரியும் வகையில் ஒரு வாரத்திற்குள் அமைக்கப்படும்.

(4) மேலும் மேற்கண்ட திறந்தவெளி இடத்தை மேம்படுத்த உரிய மதிப்பீடு செய்யப்பட்டு, நிதிநிலையை கருத்தில் கொண்டு நிர்வாக ஒப்புதல் பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்”

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்6ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் சென்னை 12, ஒட்டேரி, சோமசுந்தரம் நகர், குக்ஸ் சாலை, சர்வே எண்.273/48 Part and 274/49 Part Block No.47, Perambur Village, கதவு எண். 20/21, 25, 290/1 மற்றும் 292-இல் உள்ள 1331.12 ஸ்கோயர் மீட்டர் திறந்தவெளி நிலம் தானமாக தானபத்திரம் எண். 4995/2018 நாள் 21.08,2018 மூலமாக KLP Project Private Limited-ன் சார்பாக அதன் செயலாளர் CMDA-க்கு அளித்தார் என்றும் 20.09.2018 முதல் கடந்த ஐந்து வருடங்களாக மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோருக்கு மேற்கண்ட திறந்தவெளி இடத்தை கையகப்படுத்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர புகார் மனுக்கள் அளித்தார் என்றும் ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், அதனால் மேற்கண்ட திறந்தவெளி இடத்தை பெருநகர சென்னை மாநகராட்சி கையகப்படுத்தி, விதிமுறைகளின்படி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்றும், மேற்கண்ட இடத்தை மாநகராட்சி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர தவறிய உரிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட 1331.12 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட திறந்தவெளி இடம் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலும், அதனைச்சுற்றி சுவர் எழுப்பட்டுள்ளது என்பதும், இதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் பெயரில் பட்டா பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், அங்கு “இவ்விடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது'' என்ற அறிவிப்பு பலகை ஒரு வாரத்திற்குள் அமைக்கப்படும் என்பதும், மேற்கண்ட திறந்தவெளி இடத்தை மேம்படுத்த நிதிநிலையை கருத்தில் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டு நிர்வாக ஒப்புதல் பெறப்படும் என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் விசாரணையில் நேரடியாக ஆஜராகி பதிவு செய்த வாக்கு மூலம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மேற்கண்ட திறந்தவெளி இடத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியால் கையகப்படுத்தியுள்ளதையும் திறந்த வெளியினை சுற்றி பெருநகர சென்னை மாநகராட்சியால் சுவர் எழுப்பப்பட்டுள்ளதும் அறிய முடிகிறது. எனினும், கைப்பற்றப்பட்ட திறந்தவெளி இடத்திற்கான பட்டா பெறப்பட்டதாக மாவட்ட வருவாய் அலுவலர் (நி.ம.2) தெரிவித்திருந்த போதிலும், மனுதாரர் அதனை மறுதலிக்கையில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6–ன் உதவி செயற்பொறியாளர் அளித்த வாக்கு

மூலத்தில் பட்டா பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார். எனவே, Tvl. KLP Private Project Ltd – னால் CMDA-க்கு ஒப்பளிக்கப்பட்டு, கையகப்படுத்தப்பட்ட மேற்கண்ட இடத்திற்கு பட்டா பெறப்பட்டுள்ளதா என்பதனை ஆய்வு செய்து, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6–ன் உதவி செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு பட்டா பெறபடவில்லையெனின், பட்டா பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், அவ்விடத்தில் அறிவிப்பு பலகையினை அமைத்து, அதனை பயன்பாட்டிற்கு கொண்டு வர உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது. இதனை அறிக்கையாக 2 மாதங்களுக்குள் தாக்கல் செய்ய அறிவுறுத்தப்படுகின்றது.

இதுபோன்ற நேர்வுகளில் மாநகராட்சிக்கு தானம் அளிக்கப்படும் இடங்களை பொது பயன்பாட்டிற்கு கொண்டு வர மதிப்பீடு தயார் செய்தல், நிர்வாக ஒப்புதல் போன்ற நடைமுறைகள் பின்பற்ற வேண்டியுள்ளதால் தானமளிக்கப்படும் நிலம் பொது பயன்பாட்டிற்கு வர சிறிது காலம் ஆகக்கூடும். எனவே, மாநகராட்சிக்கு தானமளிக்கப்படும் நிலங்கள் பிற நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதை தடுக்கும் வண்ணம், தானமளிக்கப்படும் நிலங்களை உடனடியாக கையகப்படுத்தி, தேவையெனில் மதிற்சுவரமைத்து, வருவாய் ஆவணங்களில் மாநகராட்சி பெயரில் உரிய மாற்றங்கள் செய்யப்படுவதை உறுதிபடுத்தப் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6–ன் மண்டல அலுவலருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது,

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்,

1) திரு எம். கோபிநாத்,
எண்.16/158 முதல் தளம், எண்ணூர் நெடுஞ்சாலை,
துர்காதேவி நகர்,தண்டையார்பேட்டை,
சென்னை 600 081.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 6,
பெருநகர சென்னை மாநகராட்சி,
158 Strahans Road,
பட்டாளம், சென்னை–600 112.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).